

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருவரங்குளம் திருவள்ளுவர் இளைஞன் மன்ற 32 ஆம் ஆண்டு திருவள்ளுவர் தின விழா பொங்கல் விளையாட்டு விழா போட்டிகள் பள்ளி மாணவ மாணவிகளுக்கான திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி ஓட்ட பந்தய போட்டிகள், பொதுமக்களுக்கான பானை, மியூசிக் சேர் பாட்டிலில் தண்ணீர் நிரப்புதல், பானை உடைத்தல், கயிறு இழுத்தல் 1500 ஓட்ட பந்தய போட்டி, சைக்கிள் மெதுவாக ஓட்டுதல் பெண்களுக்கான கோலம் போட்டி உள்ளிட்ட ஏராளமான போட்டிகள் நடைபெற்றது. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு தலைமை தாங்கி பரிசுகளை வழங்கி பாராட்டி பேசினார். விழாவில் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பி.கே. தங்கமணி, தெற்கு ஒன்றிய செயலாளர் அரு.வடிவேல், மாவட்ட பிரதிநிதி எஸ்.முருகன், பெற்றோர் – ஆசிரியர் சங்கத் தலைவர் ராஜா கண்ணு, முன்னாள் கவுன்சிலர் ஆறுமுகம், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். முன்னதாக அனைவரையும் மன்ற அமைப்பாளர் எஸ் பாலசுப்ரமணியன் வரவேற்று பேசினார். விழா ஏற்பாடுகளை பாலா, மணிகண்டன் தகூஷிணாமூர்த்தி, ஹனிபா, பால பிரபாகரன் உள்ளிட்ட மன்ற நிர்வாகிகள் செய்திருந்தனர். முடிவில் அனைவருக்கும் இளைஞர் அணி அஜய் நன்றி கூறினார்.




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் வழிகாட்டுதலுடன் நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக சார்பில் ஒன்றிய, நகர, பேரூர் கிளை, வார்டு கழக அவைத் தலைவர் துணைச் செயலாளர், பொருளாளர், ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், தொடர்ந்து மூன்று, இரண்டு உறுப்பினர் அட்டை உள்ளவர்கள் குடும்பத்தில் உயர்கல்வி பயிலும் 1243 வாரிசுகளுக்கு ரூ. 2 கோடியே 28 லட்சத்து 90 ஆயிரம் மதிப்பில் முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகையை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், மாநில மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கியில்

# மொழிப்போர்த் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் !

## பொன். முத்துராமலிங்கம் - அமைச்சர்கள் எஸ். ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

புதுக்கோட்டை, ஜன.30-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், அறந்தாங்கி நகர தி.மு.க., புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் அறந்தாங்கி வ. உ. சி. திடலில் நடைபெற்றது.



கூட்டத்திற்கு அறந்தாங்கி நகர தி.மு.க. செயலாளர் க. ராஜேந்திரன் தலைமை தாங்கினார். புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆ. கலைச்செல்வன் வரவேற்றார். மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கை. உதயசூரியா நன்றி கூறினார். அறந்தாங்கி முன்னாள் எம்.எல்.ஏ.வும், ஆவுடையார்கோவில் வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளருமான உதயம்சண்முகம், மணமேல்குடி வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் சக்தி. இராமசாமி, அறந்தாங்கி தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் பொன். கணேசன், ஆவுடையார்கோவில் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் வி.பொன்துரை, அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் இரா.ஆனந்த், நகர் மன்ற துணைத் தலைவர் தி.முத்து, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் ஆர். எஸ். ராஜபெரியண்ணன், ஆர். எம்.கே.கார்த்திக்குமார், ஆர்.ஜெயகிருஷ்ணராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான பொன்.முத்து ராமலிங்கம், புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சருமான எஸ். ரகுபதி, தலைமை செயற்குழு உறுப்பினரும், அறந்தாங்கி மேற்கு ஒன்றியச் செயலாளரும், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சருமான சிவ.வீ. மெய்யநாதன், தலைமை கழக இளம் பேச்சாளர் சுகநிலவன் ஆகியோர் மொழிப்போர் குறித்தும், மொழிக்காக திராவிட இயக்கங்கள் செய்த பணிகளையும், மொழிப்போர் தியாகிகளின் தியாகங்களை நினைவு கூர்ந்தும் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.ஆர்.கே. கலைமணி, மாவட்ட துணைச் செயலாளர்கள் க.அடைக்கலம், ஞான. இளங்கோவன், அறந்தாங்கி கிழக்கு ஒன்றியச் செயலாளர் குமார் என்ற துரைக்கண்ணு, திருவரங்குளம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் கே.எஸ்.ரவி, பொன்னமராவதி தெற்கு ஒன்றியச் செயலாளர் தி.முத்து, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பாத்திமாபீவி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சக்திவேல், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் விமலாதிராஜன், மாவட்ட நெசவாளர் அணி தலைவர் பழனியப்பன்,

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் ஆவுடை யூனுஸ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் நசுருதீன், இரா.தமிழ்ராசு, அருண் சேகர், தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் அறந்தாங்கி செந்தில்வேலன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள், ஒன்றிய, நகர மாணவரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

